**

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 253/2020 |
| | : | Prosecution P.W -3 |
| NAME | : | சங்கர் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 03.07.2025.

முதல் விசாரணை

நான் தற்போது தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். எதிரி பாஸ்கரன் என்பவரை எனக்கு தெரியாது. பார்த்தாலும் அடையாளம் காட்ட முடியாது. அசா.1 பழனி என்னுடைய தம்பி. அசா.2 தம்பியின் மனைவி, சுமார் 8 வருடங்களுக்கு முன்பு எனது தம்பியின் ஆட்டோவை தீ வைத்து விட்டார்கள். எனக்கு காலை 6 மணிக்கு பக்கத்தில் உள்ளவர்கள் தகவல் சொல்லி தெரியும். பின்னர் நான் அந்த தெருவுக்கு சென்று பார்த்தேன். ஆட்டோ தீ எரிந்திருந்தது. ஆட்டோவின் மேற்கூரை, டிரைவர் சீட், பேட்டரி எல்லாம் தீ எரிந்திருந்தது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அசா.1 எனது தம்பி, அசா.2 எனது தம்பியின் மனைவி. நானும் அதே ஆட்டோ ஸ்டாண்டில் தான் ஆட்டோ ஓட்டுகிறேன் என்றால்

சரிதான். ஆட்டோ ஸ்டாண்டிற்கு பதிவெண் உண்டா என்றால் உண்டு. ஆட்டோ ஸ்டாண்டில் தலைவர், செயலாளர் உண்டு என்றால் சரிதான். ஆட்டோ எரிந்ததை கேள்விபட்டு தான் தெரியும் என்றாலும் நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். ஆட்டோவை எரித்த நபர்களை போலிஸார் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். எரிந்து போன வண்டிக்கு ஆர்சி புத்தகம் உள்ளது என்றால் சரிதான். அதனை என் தம்பி போலிஸாரிடம் கொடுத்தாரா என்றால் தெரியாது. ஆர்டிஓ அலுவலகத்திறகு ஆட்டோவை அதன் பின் கொண்டு சென்றாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் அசா.1ம் நானும் ஒரே ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுவதாலும் அசா.1 மற்றும் அசா.2 எனது உறவினர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 253/2020 |
| | : | Prosecution P.W -2 |
| NAME | : | மணிமாலா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 03.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் அங்கன் வாடி பணியாளராக வேலை செய்து வருகிறேன். எதிரி பாஸ்கரன் என்பவரை எனக்கு தெரியாது. பார்த்தாலும் அடையாளம் காட்ட முடியாது. அசா.1 பழனி என்னுடைய கணவர். 27.04.2019 ல் நாங்கள் தூங்கி கொண்டிருந்த போது பக்கத்து வீட்டில் ராஜன் என்ற அண்ணன் போன் செய்து உங்கள் ஆட்டோ தீப்பிடித்து எரிகிறது என்று நாங்கள் பதறி அடித்து எழுந்து பார்க்கும்போது எங்கள் ஆட்டோ தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. நான், என் கணவர், என் மச்சான் சங்கர், பக்கத்து வீட்டில் தண்ணீர் எடுத்து அணைத்தோம். ஆட்டோவின் முன்பக்கம், சீட்டு, மேற்கூரை, பேட்டரி அனைத்தும எரிந்து விட்டது. அதனால் ரூ.30000 சேதம் ஆகிஇருக்கும். ஆட்டோவை யார் எரித்தார்கள் என்றால் தெரியாது. என் கணவர் காவல்நிலையம் சென்றார். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அசா.1 எனது கணவர் என்றால் சரிதான். சங்கர் எனது கணவரின் அண்ணன் என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் கேள்விபட்டு தான் சென்றேன் என்றாலும் சரிதான். ஆட்டோவின் ஆவணங்களை போலிஸாரிடம் கொண்டு வந்து கொடுத்தாரா என்றால் தெரியாது. ஆட்டோவை புகைப்படம் எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். அதன் பின் போலிஸார் எங்களை விசாரிக்கவில்லை. ஆட்டோவை எனது கணவர் ஆர்டிஓ அலுவலகத்திற்கு கொண்டு சென்றாரா என்றால் கிடையாது. ஆட்டோவை எந்த ஒர்க்சாப்பில் வேலைக்கு விட்டார் என எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது கணவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 253/2020 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | பழனி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 03.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போதுதென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். எதிரி பாஸ்கரன் என்பவரை எனக்கு தெரியாது. பார்த்தாலும் அடையாளம் காட்ட முடியாது. 27.04.2019 ல் நான் ஆட்டோ ஓட்டி கொண்டிருந்தேன். தென்காசி வாய்க்கால் பாலம் அருகில் வசந்தம் மருத்துவமனை அருகே உள்ள ஸ்டா ண்டில் ஆட்டோ ஓட்டிக்கொண்டிருந்தேன். ஆட்டோவை ஓட்டிவிட்டு இரவு 8–9 மணிக்கு வீட்டுககு வருவேன். என்னுடைய அபே ஆட்டோவின் பதிவு எண் TN 76 AV 5880 ஆகும். இரவு நான் வீட்டிற்கு வந்து எனது ஆட்டோவை முத்துராஜ் என்பவரது வீட்டின் அருகே ஆட்டோவை தினமும் விடுவேன். ஆட்டோவை நான் விட்டு விட்டு இரவு சாப்பிட்டு விட்டு தூங்கிவிட்டேன். இரவு 2.45 மணிக்கு எனது ஆட்டோ தீப்பிடித்து எரிவதாக முத்து சாமி என்ற ராஜ் எனக்கு போன் செய்தார். பின்னர் நானும், என் மனைவி மணிமாலா மற்றும் என் உடன் பிறந்த

அண்ணன் சங்கர் ஆகியோர்களும் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம். எனது ஆட்டோ முன் பக்கம், டிரைவர் சீட், பேட்டரி, உயரிங்செட் அனைத்தும் எரிந்தது, பின்னர் நான் தீயை அணைத்தேன். அதனால் எனக்கு எனது ஆட்டோ தீ எரிந்ததால் ரூ.30000 முதல் ரூ.35000 வரை நஷ்டம் ஏற்பட்டது. மறுநாள் காலை நான் தென்காசி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இதுவரை ஆட்டோவை எரித்த நபர் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

பாஸ்கர் தான் எரித்ததாக அடையாள அணிவகுப்பு எதுவும் போலிஸார் நடத்தி காண்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த பின்பு போலிஸார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஆட்டோவின் ஆவணங்கள் எதையும் போலிஸார் வாங்கவில்லை என்றால் சரிதான். எனது ஆட்டோவை ஆர்டிஓ அலுவலகத்திற்கு நான் எடுத்து செல்லவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi